4

# திருக்குறள் கூறும் வணிக அறிவியல்

**முனைவர் எஸ். உமா**
**இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்**
**வணிகவியல் துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
**கோவை – 641029**

**ஆய்வுச்சுருக்கம்**

திருக்குறளில் பல துறை சார்ந்த செய்திகள் உள்ளடங்கியுள்ளன. இன்று வணிகவியலில் ஏற்படக்கூடிய பல மாற்றங்கள் குறித்து பண்டமாற்று முறை இருந்த அக்காலத்திலேயே திருவள்ளுவர் கூறியுள்ள செய்தி வியக்கத்தக்கது. இன்று பொருளாதார ரீதியில் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பல நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த நூல்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருக்குறளில் கூறப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

உலகப் பொதுமறை, தமிழ் மறை, பற்றாக்குறை, வெல்த் ஆஃப் நேஷன்ஸ், ஆடம்ஸ்மித், பொருளாதார வல்லுநர்கள், திட்டமிடல், சேமித்தல், அரசு, வரிவிதிப்பு

**முன்னுரை:**

**“இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை**
**மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்**
**மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்”**

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் என்று அறியப்படுபவர். இதில் 1330 குறள்கள் பத்து பத்தாக 133 அதிகாரங்கள் உள்ளன. சங்க இலக்கியங்களில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளாய் பிரித்தும், அழகுடன் இணைத்தும் விளங்குகிறது. வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் சிறப்பித்துக் கூறுகின்றன. திருக்குறள், முப்பால், உத்தர வேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம் எனப் பல பெயர்கள் உண்டு. இந்நூல் உலகப் 'பொதுமறை ' என்று அழைக்கப்படுகிறது.

**பொருளாதாரம்:**

பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் பயன்பாட்டைப் பற்றியது பொருளாதாரம் எனப்படும்.

பொருளாதாரம் என்பது ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உற்பத்தி, நுகர்வு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் பரந்த தொகுப்பாகும். அவை பற்றாக்குறை வளங்களை விநியோகிக்க உதவுகின்றன. பொருளாதார அமைப்பு என்றும் அறியப்படும் ஒரு பொருளாதாரத்தில் வாழ்பவர்களின் தேவைகளுக்கு ஏற்ப பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படுகின்றன.

**பொருளியலின் தந்தை:**

ஆடம்ஸ்மித் பொருளாதார சிந்தனை வரலாற்றில் ஒரு உயர்ந்த நபர். நாடுகளின் செல்வத்தின் தன்மை மற்றும் காரணங்கள் பற்றிய விசாரணை 1776 அரசியல் பொருளாதாரத்தின் முதல் விரிவான அமைப்பு. அவர் ஒரு சமூக தத்துவஞானியாக மிகவும் சரியாகக் கருதப்படுகிறார். வெல்த் ஆஃப் நேஷன்ஸ் என்பது பொருளாதாரம் பற்றிய ஒரு ஆய்வுக் கட்டுரையாக மட்டும் பார்க்கப்படாமல், வரலாற்று பரிணாம வளர்ச்சியின் மிகப் பெரிய திட்டத்தின் ஒரு பகுதி வெளிப்பாடு. இவர் எழுதிய நூல் நாடுகளின் செல்வம் ஆகும்.

**பொருளியல் அறிஞர் கருத்து:**

ஆடம்ஸ்மித் கூற்று: பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஒரு அறிவியல். இலயன்ஸ் ராபின்ஸ் அறிஞரின் பொருளியல் கூற்று:

“விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும், தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றிப் பயிலுகின்ற அறிவியலாகும்".

**பொருளாதாரத்தின் முக்கியந்துவம்:**

பற்றாக்குறை காலங்களில் கச்சா தீர்ந்து போவதை எதிர்கொள்வதற்கான சரியான வழிமுறையைக் கொண்டுவர இது உதவுகிறது. பொருளாதாரத்தில் அரசாங்கங்கள் தலையிடும் நிலை குறித்து பொருளாதார வல்லுநர்கள் ஒரு பிளவு பட்ட விருப்பத்தைக் கொண்டுள்ளனர். பொருளாதார வளர்ச்சி, அரசியல் பிரச்சினைகள், வேலையின்மை மற்றும் வறுமை ஆகியவற்றில் ஏதேனும் சரிவுக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்து புரிந்து கொள்வது பொருளாதார நிபுணர்களின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். இது தனிநபர்கள் சிறந்தமுடிவை காரணங்களை எடுக்க உதவும்.

**பொருளாதாரமும் திருக்குறளும்:**

மத்திய பட்ஜெட்யில் பட்ஜெட் உரையை வாசிக்கும்போது திருக்குறளில் உள்ள முக்கியமான பாடலை மேற்கோள் காட்டி பட்ஜெட் தாக்கல் செய்வார்.

இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் உள்ள குறளை 2020-21 பட்ஜெட்டில் மேற்கொள் காட்டினர்.

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.” (குறள் 385)

என்று கூறி பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும், வந்த பொருட்களைப் பத்திரமாக சேர்த்தலும் காத்து அவற்றை முறையான வழிகளில் செய்தலும் வல்லவன் அரசன் என்று விளக்கம் அளித்தார்.

**முடிவுரை**

முன்கூட்டியே சரியாகத் திட்டமிடல், உற்பத்தி செய்தல், சேமித்தல், முதலீடு செய்தல் என இந்த நான்கையும் மன்னன் செய்ய வேண்டும் என்பதை இக்குறள் வலியுறுத்துகின்றது. அது மாதிரியே அரசும் சரியாகத் திட்டமிட்டு வரிவிதிப்பில் செயல்பட்டு வருவதாக நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

**நான் கண்ட முடிவு**

ஆடம்ஸ்மித், இலயன்ஸ் ராபின்ஸ் போன்ற பொருளாதார சிந்தனையாளர்கள் கூறும் பெரும்பாலான கருத்துக்களை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அவர் சொல்லி சென்றிருக்கிறார்

**துணை நூல் பட்டியல்:**


1. கி.வா.ஜெகந்நாதன், பதிப்பாசிரியர், திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் (பதிப்பு), பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர், இரண்டாம் பதிப்பு 2004.
2. இளஞ்சேரன், அறிவியல் திருவள்ளுவம். முதற்பதிப்பு, 1994. தமிழ்நாடு திருவள்ளுவர் திருமன்றம், இராசாபுரம் 6.
3. கிருஷ்ணமூர்த்தி, ச.
   திருக்குறள் பழைய உரை. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை. முதற்பதிப்பு 1993. சென்னை-13.
4. பாலசுப்ரமணியன், சி.
   வாழ்வியல் நெறிகள், முதற்பதிப்பு, 1990.
   நறுமலர்ப் பதிப்பகம், சென்னை 29.திருக்குறள் பழைய உரை. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை. முதற்பதிப்பு 1993. சென்னை-13.புலியூர்கேசிகன் ( உரையாசிரியர்), திருக்குறள் மூலமும் உரையும், சந்தியா பதிப்பகம், 2019


.